### கழக இளைஞர் அணி தேர்ந்தெடுத்த ‘என் உயிரினும் மேலான...’

# சென்னை கிழக்கு மாவட்டத்தில் இளம் பேச்சாளர்கள் உரை வீச்சு!

## தலைவர் – முதல்வர் மு.க.ஸ்டாலின் நிகழ்ச்சிக்கு திடீர் வருகை தந்து உரைகளைக் கேட்டு ரசித்தார்!

சென்னை, நவ.10-

**கழக இளைஞர் அணி சார்பில் ‘என் உயிரினும் மேலான...’ எனும் தலைப்பில் பேச்சுப் போட்டியில் தேர்வானவர்களின் உரை முழக்கம் அனைவரையும் வெகுவாக கவர்ந்து வருகிறது. அந்த வகையில் நேற்று சென்னை கிழக்கு மாவட்டத்தில் இளம் பேச்சாளர்கள் உரையாற்றிய நிகழ்ச்சிக்கு தலைவர், முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் திடீர் வருகை தந்து பேச்சாளர்களின் உரையை கேட்டு ரசித்தார்.**

முத்தமிழறிஞர் தலைவர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டை முன்னிட்டு, கழகத்தின் இளைஞரணியின் சார்பில் கழகத்துக்காக 100 பேச்சாளர்களைத் தேர்வு செய்யும் வகையில் “என் உயிரினும் மேலான” என்ற தலைப்பில் மாநில அளவிலான பேச்சுப் போட்டி நடத்தப்பட்டது. கழக இளைஞரணியுடன் கலைஞர் செய்திகள் தொலைக்காட்சியும் இணைந்து இந்தப் போட்டியை ஒருங்கிணைந்து நடத்தியது. 17 ஆயிரம் போட்டியாளர்கள் 78 நடுவர்கள் மாவட்ட அளவில் தேர்வானவர்களுக்கு மண்டல வாரியாகப் போட்டிகள் என்று மிகப் பிரமாண்டமாக நடத்தப்பட்ட இப்போட்டியில் 182 பேச்சாளர்கள் தேர்வு செய்யப்பட்டு, இறுதிப் போட்டியில் வெற்றி பெற்ற மூன்று பேச்சாளர்களுக்கு கழகத் தலைவரும் தமிழ்நாடு முதலமைச்சருமான மு.க.ஸ்டாலின் அவர்கள் 27.10.2024 அன்று சென்னை, அண்ணா அறிவாலயத்தில் நடைபெற்ற விழாவில் பரிசுகளை வழங்கி சிறப்பித்தார்.

“என் உயிரினும் மேலான” பேச்சுப் போட்டியில் தேர்வு செய்யப்பட்ட 182 பேச்சாளர்களை கழகத்தினர் பயன்படுத்தி கொள்ள வேண்டும் என்றும், மாநில முழுவதும் அப்பேச்சாளர்களை கொண்டு கழகத்தின் சாதனைகள் குறித்து மக்களிடம் விளக்கிடும் வண்ணம் நிகழ்ச்சிகள் நடத்திட வேண்டும் என்றும் கழகத் தலைவரும், தமிழ்நாடு முதலமைச்சருமான மு.க.ஸ்டாலின் அவர்கள் அறிவுறுத்தி இருந்தார்.

அதன்படி, சென்னை கிழக்கு மாவட்ட திமுக சார்பில் நேற்று (8.11.2024) கொளத்தூர், ஜி.கே.எம்.காலனி, அரிச்சந்திரா மைதானத்தில், கழகத்தின் வரலாறு மற்றும் சாதனைகள், கழக ஆட்சியில் மக்களின் நல்வாழ்விற்காக செயல்படுத்தப்பட்ட திட்டங்கள் ஆகியவற்றை பற்றி எடுத்துரைக்கும் வகையில், திராவிடர் கழகத்தின் துணை பொதுச் செயலாளர் வழக்கறிஞர் மதிவதனி அவர்கள் விழாப் பேருரையாற்றிட “என் உயிரினும் மேலான” பேச்சுப் போட்டியில் தேர்வு செய்யப்பட்ட இளம் பேச்சாளர்களான கோகுல் மற்றும் செல்வி.இராஜராஜேஸ்வரி ஆகியோரது எழுச்சி உரையுடன் நிகழ்ச்சி நடத்தப்பட்டது.

**முதல்வரின் திடீர் வருகை!**

கழகத் தலைவரும், தமிழ்நாடு முதலமைச்சருமான மு.க.ஸ்டாலின் அவர்கள் தனது கொளத்தூர் தொகுதியில் நடைபெற்ற இந்த நிகழ்ச்சிக்கு திடீரென்று நேரில் வருகை தந்து, இளம் பேச்சாளர்களின் உரைகளை கேட்டு ரசித்தார்.

அதனைத் தொடர்ந்து, சென்னை கிழக்கு மாவட்ட தி.மு.க. சார்பில் கழகத் தலைவர், தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் கொளத்தூர் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட பகுதிகளில் மேற்கொண்ட பல்வேறு வளர்ச்சி திட்டப் பணிகள், செயல்படுத்திய திட்டங்கள், மக்களுக்கு வழங்கிய நலத்திட்ட உதவிகள் ஆகியவற்றை பற்றி விளக்கும் “நம்ம கொளத்தூர், நம்ம முதல்வர்” என்ற புகைப்படக் கண்காட்சியை பார்வையிட்டார்.

இந்த நிகழ்வின்போது, மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன், இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் பி.கே.சேகர்பாபு, பெருநகர சென்னை மாநகராட்சி மேயர் திருமதி ஆர்.பிரியா, நாடாளுமன்ற உறுப்பினர்கள் ஆ.இராசா, கிரிராஜன், கலாநிதி வீராசாமி, சட்டமன்ற உறுப்பினர் தாயகம் கவி, தமிழ்நாடு சேமிப்புக் கிடங்கு நிறுவனத்தின் தலைவர் ப.ரங்கநாதன் மற்றும் கழக நிர்வாகிகள் உடனிருந்தனர்.



கழகத் தலைவரும் – தமிழ்நாடு முதலமைச்சருமான மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (8.11.2024) சென்னை கிழக்கு மாவட்ட தி.மு.க. சார்பில் கொளத்தூர், ஜி.கே.எம்.காலனி, அரிச்சந்திரா மைதானத்தில், கழகத்தின் வரலாறு மற்றும் சாதனைகள், கழக ஆட்சியில் மக்களின் நல்வாழ்விற்காக செயல்படுத்தப்பட்ட திட்டங்கள் ஆகியவற்றை பற்றி எடுத்துரைக்கும் வகையில், திராவிடர் கழகத்தின் துணைப் பொதுச் செயலாளர் வழக்கறிஞர் மதிவதனி விழாப் பேருரையாற்றிட “என் உயிரினும் மேலான” பேச்சுப் போட்டியில் தேர்வு செய்யப்பட்ட இளம் பேச்சாளர்களின் எழுச்சி உரை நிகழ்ச்சிக்கு நேரில் வருகை தந்து, இளம் பேச்சாளர்களின் உரைகளைக் கேட்டு ரசித்தார். இந்த நிகழ்வின்போது, மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன், இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் பி.கே. சேகர்பாபு, பெருநகர சென்னை மாநகராட்சி மேயர் ஆர்.பிரியா, நாடாளுமன்ற உறுப்பினர்கள் ஆ.இராசா, இரா.கிரிராஜன், கலாநிதி வீராசாமி. சட்டமன்ற உறுப்பினர் தாயகம் கவி, தமிழ்நாடு சேமிப்புக் கிடங்கு நிறுவனத் தலைவர் ப. ரங்கநாதன் மற்றும் கழக நிர்வாகிகள் உடனிருந்தனர்.

### அரசு கல்லூரிக் கல்வி - தொழில் நுட்பக் கல்வி

# ஆசிரியர்களுக்கு இடமாறுதலுக்கான கலந்தாய்வு!

## உயர் கல்வித்துறை அமைச்சர் முனைவர் கோவி. செழியன் அறிவிப்பு!

*சென்னை, நவ.10-*



முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களுடைய அறிவுரையின்படி தமிழ்நாடு அரசின் கல்லூரிக் கல்வி, தொழில் நுட்பக் கல்வி ஆசிரியர்களுக்கு பணி இட மாறுதலுக்கான பொது கலந்தாய்வு நடைபெறும் என உயர்கல்வித் துறை அமைச்சர் முனைவர் கோவி.செழியன் அறிவித்துள்ளார்.

தமிழ்நாடு அரசு கல்லூரிக் கல்வித் துறையின்கீழ் இயங்கும் அரசு கலை, அறிவியல் மற்றும் கல்வியியல் கல்லூரிகளில் பணிபுரியும் ஆசிரியர்கள் மற்றும் தொழில்நுட்பக் கல்வித் துறையின்கீழ் இயங்கி வரும் அரசு பொறியியற் கல்லூரிகள், அரசினர் பாலிடெக்னிக் கல்லூரிகள், அரசினர் சிறப்புப் பயிலகங்கள் ஆகியவற்றில் பணிபுரியும் ஆசிரியர்களிடமிருந்து பணியிட மாறுதலுக்கான பொதுகலந்தாய்வு நடைபெற வேண்டுமென அரசுக்குக் கோரிக்கைகள் வரப்பெற்றுள்ளன.

ஆசிரியர்களின் இந்தக் கோரிக்கைகளைப் பரிவுடன் ஏற்று, நடப்பு ஆண்டில் மேற்கண்ட துறைகளின்கீழ் பணிபுரியும் ஆசிரியர்களுக்குப் பணியிட மாறுதலுக்கான பொது கலந்தாய்வினை வெளிப்படைத் தன்மையுடன் இணைய வழியின் வாயிலாக மேற்கொள்ளலாம் என அரசு முடிவு செய்துள்ளது. அதன்படி, கல்லூரிக் கல்வித் துறையின்கீழ் இயங்கும் அரசு கலை, அறிவியல் மற்றும் கல்வியியல் கல்லூரிகளில் பணிபுரியும் ஆசிரியர்களுக்கும் மற்றும் தொழில் நுட்பக் கல்வித் துறையின்கீழ் இயங்கும் அரசினர் பொறியியற் கல்லூரிகள், அரசினர் பாலிடெக்னிக் கல்லூரிகள், அரசினர் சிறப்புப் பயிலகங்கள் ஆகியவற்றில் பணிபுரியும் ஆசிரியர்களுக்கும் 2024-25-ஆம் கல்வி ஆண்டிற்கான பணியிட மாறுதலுக்கான பொது கலந்தாய்வினை (counseling) உரிய நெறிமுறைகளைப் பின்பற்றி 25.11.2024-க்குள்ளாக வெளிப்படைத் தன்மையுடன் இணையவழியின் வாயிலாக மேற்கொள்ளுமாறு தமிழ்நாடு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்களின் அறிவுரையின்படி உயர்கல்வித் துறை அமைச்சர் முனைவர் கோவி.செழியன் அவர்கள் தெரிவித்துள்ளார்.

அதற்கிணங்க இணைய வழியாகப் பெறப்படுகின்ற ஆசிரியர்களின் மாறுதல் விண்ணப்பங்கள் உரிய விதிகளின்படி பரிசீலனை செய்யப்பட்டு ஆணைகள் வழங்கப்படும் என தமிழ்நாடு அரசு அறிவித்துள்ளது.



விழுப்புரம் தொகுதி, தகவல் தொழில்நுட்ப அணி சமூக வலைதள ஒருங்கிணைப்பாளர் டி.ஆர்.எஸ்.குருராமலிங்கம் திருமண விழாவில் வனத்துறை அமைச்சர் முனைவர் க.பொன்முடி எம்.எல்.ஏ., திருமதி விசாலாட்சி பொன்முடி, விழுப்புரம் தெற்கு மாவட்டப் பொறுப்பாளர் டாக்டர் பொன்கௌதம சிகாமணி ஆகியோர் கலந்துகொண்டு மணமக்களை வாழ்த்தினார்கள். மாநில மாவட்டப் பொருளாளர் இரா.ஜனகராஜ், மாநில ஆதிதிராவிடர் நலக்குழு இணைச் செயலாளர் செ.புஷ்பராஜ், மாவட்ட துணைச் செயலாளர் தயா.இளந்திரையன், நகரச் செயலாளர் இரா.சக்கரை, பொதுக்குழு பஞ்சநாதன், நகர மன்றத் தலைவர் தமிழ்ச்செல்வி பிரபு, ஒன்றியச் செயலாளர்கள் க.மும்மூர்த்தி, தே.முருகவேல், கல்பட்டு வி.ராஜா, பி.வி.ஆர்.சு.விசுவநாதன், பேரூர்ச் செயலாளர் பா.ஜீவா, நகரப் பொருளாளர் என்.என்.இளங்கோ, மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் செ.தினகரன், தொண்டர் அணி கபாலி, தொழிலாளர் அணி கேபிள் சுரேஷ்பாபு, தகவல் தொழில்நுட்ப அணி அமைப்பாளர் ப.அன்பரசு மற்றும் பலர் உடனுள்ளனர்.



கள்ளக்குறிச்சி மாவட்டம், சங்கராபுரம் வட்டம் அ.பாண்டலம் ஊராட்சி கல்வித்துறை (ஓய்வு) பா.நடராஜன், வடக்கு மாவட்ட கழக துணை செயலாளர், அ.பாண்டலம் ஊராட்சி மன்ற தலைவர் பாப்பாத்தி நடராஜன் திருமணத்தை பொதுப்பணிகள், நெடுஞ்சாலைகள் மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் எ.வ.வேலு சிறப்பு அழைப்பாளராக கலந்து கொண்டு தலைமை தாங்கி திருமணத்தை நடத்தி வைத்து மணமக்கள் ந.நவீன் ராஜ், ஜீ.நித்யாவை வாழ்த்தினார்,இதில் கள்ளக்குறிச்சி வடக்கு மாவட்ட கழக செயலாளர் தா.உதயசூரியன் எம்.எல்.ஏ., தெற்கு மாவட்டச் செயலாளர் வசந்தம் க.கார்த்திகேயன் எம்.எல்.ஏ,வடக்கு மாவட்ட அவைத் தலைவர் ஆ.ஜெ.மணிக்கண்ணன் எம்.எல்.ஏ., தே.மலையரசன் எம்.பி,மாநில துணை செயலாளர் ஆ.அங்கையற் கண்ணி ஆகியோர் உடன் கலந்து கொண்டனர்.



தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் சென்னை, தலைமைச் செயலகத்திலிருந்து காணொலி காட்சி வாயிலாக பள்ளிக் கல்வித்துறை சார்பில், நீலகிரி மாவட்டத்தில் ரூ.6.56 கோடி மதிப்பீட்டில் கட்டி முடிக்கப்பட்ட கூடுதல் வகுப்பறை கட்டடங்கள் மற்றும் ஆய்வகத்தினை 08.11.2024 அன்று திறந்து வைத்தார். அரசு தலைமை கொறடா கா.ராமச்சந்திரன், கூடலூர் அரசு மாதிரி மேல்நிலைப்பள்ளியில் குத்துவிளக்கேற்றி வைத்தர். உடன் மாவட்ட முதன்மை கல்வி அலுவலர் திரு.நந்தகுமார் (பொ), பொதுப்பணித்துறை (கட்டிடம் (ம) பராமரிப்பு) செயற்பொறியாளர் திரு.ரமேஷ், கூடலூர் நகராட்சித் தலைவர் திருமதி.பரிமளா உட்பட பலர் உள்ளனர்.